[1986 ஏப்ரல் 30]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 63,89,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 53. பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சைதை சா. துரைசாமி) பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,38,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

8. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சைதை சா. துரைசாமி) பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :

1—5—1986 (வியாழக்கிழமை) முதல் 6—5—1986 (செவ்வாய்க்கிழமை வரை, ஏற்கெனவே அறிவித்துள்ளபடி மாற்றம் எதுவுமில்லை. எனினும் 2—5—1986 (வெள்ளிக்கிழமை) பேரவைக் கூட்டம் காலை 9.00 மணிக்குப் பதிலாக மாலை 4.00 மணிக்குத் தொடங்கும்.

1986 ஏப்ரல் 30] [மாற்றுத் தலைவர்]

(மாலை 6-40)

7—5—1986 (புதன்கிழமை).	29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.
8—5—1986 (வியாழக்கிழமை).	7—மாநிலச் சட்டமன்றம். 8—தேர்தல்கள். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும். 43—பல்வகை. 58—பல்வகை மூலதனச் செலவு. 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். 44—எழுது-பொருள் அச்சுத்துறை. 1. 1986-87 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாவாதமும் வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்த வரை விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்பு. 2. வாக்கெடுப்பிற்குப் பின் 1986-87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு — அறிமுகம் செய்தல்.
9—5—1986 (வெள்ளிக்கிழமை)	1986-87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச்சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
10—5—1986 (சனிக்கிழமை)	தனியார் அலுவல்கள்.
11—5—1986 (ஞாயிற்றுக்கிழமை).	விடுமுறை.

12—5—1986 (திங்கட்கிழமை) 13—5—1986 (செவ்வாய்க்கிழமை)	அரசினர் சட்டமுன் வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் பிற அரசு அலுவல்கள்.

(பேரவை காலையிலும் மாலையிலும் கூடும்).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (2—5—1986) மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.41 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 6—3—1986 ஆம் நாளிட்ட 339 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

73. தமிழ்நாடு அரசு பற்றிய இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது (ஆங்கிலம்).

74. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1984—85 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

151. 1986–87 ஆம் ஆண்டிற்கான பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான நீர்ப் பாசனத்துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).